**MCOP NO: 3790/2022 DATE: 18.02.2026**

ம.சா : 1

பெயர் : திருமதி.மலர்

க/பெ : திரு. முருகன்

வயது : 45

**மசா1 மீண்டும் வரவழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 20 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனக்கு 2 மகன்கள் உள்ளனர். மூத்த மகனின் வயது 23, டைலராக பணிபுரிகிறார். இளைய மகன் தினக்கூலி வேலை செய்கிறார். மூத்த மகனிற்கு திருமணம் ஆகிவிட்டது, இளைய மகனிற்கு திருமணம் ஆகவில்லை. என் கணவரின் வருமானத்தை சார்ந்து என் மகன்கள் வாழவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து புகார் என் மைத்துனர் முருகன் என்பவர் கொடுத்தார். நானும், எனது கணவரும் விபத்தின் போது என் கணவர் இருசக்கர வாகனத்தை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து சென்றேன். எனது கணவர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் என் கணவருடையதாகும். என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஓட்டுநர் உரிமம் இருந்திருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல, விபத்தின் போது அது தொலைந்துவிட்டது. விபத்தின் போது எனது கணவரின் இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு செய்யப்பட்டதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் சொல்லியதுபோல் என் கணவர் ஓட்டி சென்ற வாகனமும், எதிரே வந்த வாகனமும் எதிர் எதிராக மோதிக்கொண்டது என்றால் சரிதான். என் கணவர் தலைகவசம் அணிந்து சென்றாரா என்றால் அணிந்து சென்றார். நான் இவ்வாறு சொல்வது தவறு என்றாலும், என் கணவர் தலைகவசம் அணிந்து சென்றிருந்தால் உயிர்சேதம் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. விபத்தினால் எனக்கும் வலது காலில் அடிபட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்யவில்லை. என் கணவர் கூலி வேலை தான் செய்து வந்தார். என் கணவரின் வருமானம் சம்பந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு அனுமதி சான்றிதழானது 04.05.2020 அன்றே காலாவதியாகிவிட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அதனால் 2ம் எதிர்மனுதாரரர் எந்தவித இழப்பீடும் கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. நான் ஏதேனும் இழப்பீடு

பெற வேண்டும் என்றால் அதை 1ம் எதிர்மனுதாரரிடம் தான் பெற வேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு 18.02.2026 ல் அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.